தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "விவசாயிகளாக மாறிவரும் மென்பொருள் பொறியாளர்கள்"

வேளாண்மை லாபகரமான தொழிலாக மாறி வருவதால் மென்பொருள், தகவல் தொழில்நுட்பப் பொறியாளர்களும் விவசாயிகளாக மாறி வருவதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்துள்ளார். கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் வளம்குன்றா, லாபகரமான வேளாண்மை என்னும் கருத்தை வலியுறுத்தும் விதமாக, தென்னிந்திய அளவிலான வேளாண் கருத்துக் காட்சி, உழவர் நாள் விழா ஆகியவை நடைபெறுகின்றன. 4 நாள்களுக்கு நடைபெறும் விழாவின் தொடக்க நிகழ்ச்சி பல்கலைக்கழக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் ஒருபகுதியாக விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. மத்திய வேளாண் அமைச்சக பண்ணைத் தகவல் துறை இயக்குநர் ஓ.பி.தாஹியா முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழக வேளாண் துறை இணைச் செயலர் சி.ராஜேந்திரன், பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அ.ராமகிருஷ்ணன், வேளாண் இணை இயக்குநர் வி.வின்சென்ட் மனோகரன் உள்ளிட்ட அதிகாரிகள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். "வேளாண் உற்பத்தியை இரு மடங்கு ஆக்குவோம், உழவரின் வருவாயை மும்மடங்கு ஆக்குவோம்' என்ற தலைப்பில் வேளாண் தொழில்நுட்ப குறும்படக் காட்சி நடைபெற்றது. முன்னதாக, பல்கலைக்கழக தொழில்நுட்பப் பூங்கா வளாகத்தில் வேளாண் விளை பொருள்களின் கண்காட்சி நடைபெற்றது. இதை வேளாண்மைத் துறை இணைச் செயலர் சி.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். இதில், வேளாண் கருவிகள், புதிய கண்டுபிடிப்புகள், விளை பொருள்கள்,

மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வேளாண் கருத்துக் காட்சி, உழவர் தினவிழா குறித்து துணைவேந்தர் கு.ராமசாமி கூறியது: நாட்டில் ஒட்டுமொத்தமாக ஆராய்ச்சிக்கு செலவிடும் தொகையில் ஒரு சதவீதம் மட்டுமே வேளாண் ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்படுகிறது. இதை மேலும் அதிகரிக்க வேண்டும். தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பல்வேறு மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. இருப்பினும் நவீன தொழில்நுட்பம், விவசாயிகளின் ஆர்வம் காரணமாக இப்போது 1.13 கோடி டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. வேளாண்மை மிகவும் லாபகரமான தொழிலாக மாறியுள்ளது. இதனால் அதிகளவில் மாத வருவாய் பெறக்கூடிய தொழில்களான மென்பொருள், தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றி வந்த பொறியாளர்கள் கூட, தங்களது பணிகளை விட்டு விட்டு இப்போது வேளாண் தொழிலில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். சென்னை அருகேயுள்ள சிங்கபெருமாள்கோயில் அருகில் சுமார் 25-க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவன முன்னாள் பணியாளர்கள், காய்கறிகளை பயிரிட்டு கோயம்பேடு சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். அதேபோல் திருவாரூர், தேனி மாவட்டங்களில் வாழை பயிரிடும் மென்பொருள் பொறியாளர்கள், பழங்களை உலர்த்தி, சாக்லெட் உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்கின்றனர். மயிலாடுதுறை, கும்பகோணம் பகுதிகளில் தனியார் பெரு நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து வருபவர்கள், மன நிம்மதிக்காகவும், வருவாய் ஈட்டுவதற்காகவும் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் விவசாயம் செய்து வருகின்றனர். பெங்களூரு, சென்னை போன்ற நகரங்களில் பணியாற்றும் அவர்கள், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தங்களது தோட்டத்துக்கு வந்து வேலை செய்கின்றனர். அதிநவீன யுக்திகளைக் கையாளும் மென்பொருள் நிறுவன முன்னாள் பணியாளர்கள் ஆண்டுக்கு ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரையிலும் வருவாய் ஈட்டி வருகின்றனர். வாழை உற்பத்தியில் தேசிய அளவில் சாதனை படைத்தவர்கள் தனியார் நிறுவனத்தில் இருந்து விலகி,

விவசாயத்துக்கு வந்தவர்கள்தான். எனவே, உணர்வுப்பூர்வமாக விவசாயத்தில் நுழைபவர்கள் மிகப்பெரிய வெற்றியை அடைவார்கள். விவசாயத் தொழிலைத் தேர்வு செய்ய விரும்பும் இளைஞர்களுக்காகவும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்காகவும் இதுபோன்ற வேளாண் கருத்துக் காட்சி, உழவர் நாள் விழாக்கள் துணையாக இருக்கும் என்றார் அவர்.

**பார்வையாளர்களைக் கவர்ந்த பாரம்பரிய விதை சேமிப்புக் கலன்கள்**

உழவர் திருவிழா கண்காட்சியில் இடம் பெற்றிருந்த பாரம்பரிய விதை சேமிப்புக் கலன்கள், பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன. நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில், பாரம்பரிய விதை சேமிப்புக் கலன்களான வைக்கோலால் ஆன கோட்டை, களிமண்ணால் ஆன குதிர், மரத்தாலான பத்தாயம் ஆகியவை இடம் பெற்றிருந்தன. இவை தொடர்பாக அரங்கின் நிர்வாகி உதவிப் பேராசிரியர் ராஜா ரமேஷ் கூறும்போது, விவசாயிகள் தங்களது தோட்டத்தில் விளையும் நெல் உள்ளிட்ட பயிர்களில் தரமானவற்றை விதைக்காகத் தேர்வு செய்து அடுத்த ஆண்டு வரை சேமித்து வைப்பார்கள். வைக்கோல் மூலம் எளிய முறையில் பாதுகாக்கப்பட்டு, சாணி கொண்டு பூசப்படும் கோட்டை என்ற கலனில் விதைகள் பூச்சி, புழுக்கள் தாக்காமல் பாதுகாக்கப்படும். இதை அடுத்த ஆண்டில் நீரில் ஊறவைத்து விதைகளை எளிதாகப் பிரித்து பயன்படுத்த முடியும். இதே போலவே குதிர், பத்தாயங்கள் மூலம் நமது முன்னோர்கள் விதைகளை தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வந்துள்ளனர். தமிழகத்தில் மட்டும் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. ஆனால், விதைகளைப் பாதுகாப்பதில் ஏற்பட்ட தொய்வால் அவை முற்றிலும் அழிந்துவிட்டன. இப்போது வெறும் 100 பாரம்பரிய ரகங்கள் மட்டுமே மீட்டெடுக்கப்பட்டுள்ளன. அதிலும் 10 முதல் 15 ரகங்கள் மட்டுமே விவசாயிகளால் பயிரிடப்படுகின்றன என்றார். விதை சேமிப்புக் கலன்களைப் போலவே, தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் வைக்கப்பட்டிருந்த மின்சாரமின்றி

காய்கறிகளை கெடாமல் பாதுகாக்கக் கூடிய, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட காய்கறி, பழம் சேமிப்புக் கலன்களும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

**<u>மேட்டூர் அணை: மீண்டும் தண்ணீர் திறப்பு</u>**

மேட்டூர் அணையில் இருந்து மூன்று மாவட்ட விவசாயத்துக்கு மீண்டும் தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவிட்டார். இதுகுறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: மேட்டூர் அணையில் இருந்து புள்ளம்பாடி, புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்கள் மூலம் தஞ்சாவூர், திருச்சி, அரியலூர் மாவட்டங்களிலுள்ள 42 ஆயிரத்து 736 ஏக்கர் நிலங்களின் பாசனத்துக்காக கடந்த ஆண்டு ஆகஸ்ட் முதல் ஏற்கெனவே தண்ணீர் திறந்து விடப்பட்டது. இப்போது அந்தப் பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெல், விளைச்சலுக்குத் தயாராகாத நிலையில் உள்ளதால் தண்ணீர் திறந்துவிட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதை ஏற்று, வரும் புதன்கிழமை முதல் பிப்ரவரி 15-ஆம் தேதி வரை மேலும் 40 நாள்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்படுகிறது என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்தெரிவித்துள்ளார்.

**<u>நவீன தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்த வேண்டும்: ஆளுநர்</u>**




நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்த வேண்டியது அவசியம் என தமிழக ஆளுநர் கே. ரோசய்யா வலியுறுத்தினார். எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய ஆராய்ச்சியாளர் பரசுராமன் எழுதிய வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா ஆளுநர்

மாளிகை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நூலை வெளியிட்டு ஆளுநர் ரோசய்யா பேசியது: விவசாயத்துக்கு சிறந்த வழிகாட்டியாக இருப்பதோடு, நாட்டின் வேளாண் உற்பத்திக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்கியவர் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன். இவருடைய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி இருப்பதோடு, விவசாயிகளின் வாழ்க்கையிலும் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. இவருடைய நிலைத்த நீடித்த உணவுப் பாதுகாப்பு முயற்சி, உலக அளவில் அவரைப் பிரபலமடையச் செய்தது. ஆனால், இன்று விவசாயிகள் வேலை தேடியும், பிற பிரச்னைகளாலும் நகரங்களை நோக்கி குடிபெயர்ந்து வருவது மிகுந்த கவலை அளிக்கும் விஷயமாக உள்ளது. இரண்டாவது பசுமைப் புரட்சிக்கான அவசியம் ஏற்பட்டுள்ளதையே இது காட்டுகிறது. விவசாயத்தில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதும், அந்த நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்துவதும் அவசியமாகும் என்றார். தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சந்தீப் சக்ப்ஸனா: தமிழக வேளாண் துறை உதவிச் செயலாளராகப் பணியாற்றியபோது வேளாண் ஆராய்ச்சியாளர் எம்.எஸ். சுவாமிநாதனோடு அடிக்கடி உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர் அளித்த ஆலோசனைகளின் மூலம், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை எளிதாக தமிழக விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க முடிந்தது. அதன்மூலம், தமிழகம் உணவு தானிய உற்பத்தியில் சாதனை படைத்து, இரண்டு முறை "கிரிஷி கர்மன்' தேசிய விருதைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட மிகப் பெரிய சாதனையாளரின் வாழ்க்கை வரலாற்றை தமிழ் மொழியில் நூலாக ஆராய்ச்சியாளர் பரசுராமன் உருவாக்கியிருப்பது பாராட்டுக்கு உரியது. ஏனெனில், நூலில் இடம் பெற்றிருக்கும் தகவல்கள் மாநிலத்தின் இளைஞர்களிடையேயும், விவசாயிகளிடையேயும் எளிதாகச் சென்றடையும். அதன் மூலம் விவசாயிகள் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவர் என்பதோடு,

தற்கொலைகளும் குறைய வாய்ப்பு உள்ளது என்றார். எம்.எஸ். சுவாமிநாதன், மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி, சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர். தாண்டவன், பத்திரிகையாளர் என்.ராம் உள்ளிட்ட பலர் விழாவில் பங்கேற்றனர்.

## அ.வல்லாளபட்டியில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் தொடக்க விழா

மேலூர் வட்டத்தில் வேளாண்மைத் துறையில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டம் சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் திங்கள்கிழமை தொடங்கிவைக்கப்பட்டது. மேலூர் அருகிலுள்ள அ.வல்லாளபட்டி பேரூராட்சியில் நடைபெற்ற விழாவுக்கு அதன் தலைவர் உமாபதி தலைமை வகித்தார். மேலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ம.சரவணன், மேலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜவஹாா்பாய் ஆகியோர் வயல் ஆய்வு பணியை தொடங்கி வைத்தனர். அப்போது, சோளத்தில் குருத்துப்புழு, வாழையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள், தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும் இவ்வட்டாரத்தில் ஐந்து உதவி வேளாண்மை அலுவலர்கள் குறிப்பிட்ட கிழமைகளில் கிராமத்திற்குச் சென்று விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து விவசாயத்திலுள்ள பிரச்சினைகள், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம்அளிப்பார்கள்.

## விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்கள் வழங்கல்...

அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின் மூலம் 641 விவசாயிகளுக்கு ரூ. 43.58 லட்சம் மதிப்பிலான விசைத் தெளிப்பான்களை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் திங்கள்கிழமை வழங்கினார். இதில் திருமானூர், தா. பழூர் வட்டாரங்களில் உள்ள ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டம் ஐரஙட - 2,5 6,7 ஆகியவற்றில் உள்ளடக்கிய 24 நீர்வடிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தலா ரூ. 6800 மதிப்பில் ரூ. 43.58 லட்சம் மதிப்பிலான விசைத் தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில்

ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தீ. சடையப்ப விநாயகமூர்த்தி, மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் துணை இயக்குநர் ம.செந்தமிழ்ச்செல்வன், வேளாண் உதவி இயக்குநர் அ. பாண்டியன், சம்பந்தப்பட்ட நீர்வடிப் பகுதிகளின் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## 88 கால்நடைகள் ஏலம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடை துறையினரால் பராமரிக்கப்பட்டு வந்த கால்நடைகளில் கழிக்கப்பட்ட 88 கால்நடைகள் செவ்வாய்க்கிழமை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டன. புதுக்கோட்டை பால்பண்ணை அருகேயுள்ள கால்நடைப் பராமரிப்பு அலுவலகத்தில் அலுவலர்களின் முன்னிலையில் இவை ஏலம் விடப்பட்டன. அதை விவசாயிகள் கட்டுபடியான விலைக்கு ஏலம் எடுத்துச் சென்றனர். அதன்படி 52 மாடுகள், 18 வெள்ளாடுகள், 5 செம்மறிஆடுகள், 13 பன்றிகள் உள்ளபட மொத்தம் 88 கால்நடைகள் ஏலம் விடப்பட்டன. ஏலத்தை கால்நடைத் துறை மாவட்ட இணை இயக்குநர் வி. மகாலிங்கம் தலைமையிலான அலுவலர்கள் நடத்தினர்.

## பெருந்தரக்குடியில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம்

திருவாரூர் அருகே ரூ. 10 லட்சத்தில் கட்டப்பட்ட கால்நடை மருத்துவ கிளை அலுவலகம் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது. திருவாரூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர், திமுக தலைவர் கருணாநிதியின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து திருவாரூர் அருகே பெருந்தரக்குடியில் மக்களின் கோரிக்கை யை ஏற்று ரூ. 10 லட்சத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டது. இதை கொரடாச்சேரி ஒன்றியக் குழுத் தலைவர் அறிவழகன் தலைமையில் நடைபெற்ற விழாவில், திமுக மாவட்டச் செயலர் பூண்டி கே. கலைவாணன் திறந்து வைத்தார். திமுக நிர்வாகிகள் உமாசங்கர், பாலசந்தர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**<u>நீலகிரியில் விவசாயிகள் குழு சார்ந்த பயணத்திட்டம் துவக்கம்</u>**

நீலகிரியில் தேயிலை விவசாயிகளுக்காக விவசாயிகள் குழு சார்ந்த பயணத் திட்டம் துவங்கப்படவுள்ளதாக ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்தார். உதகை அருகேயுள்ள கல்லக்கொரை கிராமத்தில் தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறையின் சார்பில், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறைத் திட்டத்தை திங்கள்கிழமை ஆட்சியர் துவக்கி வைத்தார். தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி வரவேற்றார். ஆட்சியர் பேசியதாவது: தமிழக விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ரீதியாக உதவும் வகையில் தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறையில் தமிழக அரசு புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. இரண்டாம் பசுமைப் புரட்சி, இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம் என்ற நோக்கில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த விரிவாக்க முறை திட்டத்தின் கீழ் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

அனைத்து விவசாயிகளுக்கும், அவரவர் விளை நிலத்திலேயே புதிய வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகளையும், பயிற்சியையும் அளிக்கும் வகையில் தோட்டக் கலைத்துறையின் இப்புதிய திட்டம் செயல்படும். இதன்படி வரையறுக்கப்பட்ட பயணத் திட்டமாக உதவி வேளாண் அலுவலர்கள் வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை தங்கள் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு சென்று விவசாயிகளை சந்திப்பர். மேலும், ஒவ்வொரு ஊராட்சியிலும் 20 முதல் 25 உறுப்பினர்களைக் கொண்ட இரு விவசாய ஆர்வலர் குழுக்களும் அமைக்கப்படும். அவர்கள் உதவி வேளாண் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவர். ஒவ்வொரு உதவி வேளாண் அலுவலருக்காக கிராமங்கள் 8 தொகுதிகளாக பிரிக்கப்படும். இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று விவசாயிகளை சந்தித்து, புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்வர். தோட்டக்கலைத் துறை மூலமாக அளிக்கப்படும் மானியத்

திட்டங்களுக்கான விண்ணப்பங்களையும், விவசாயிகள் இருக்குமிடத்திற்கே சென்று நிரப்பி அளிப்பர். இப்புதிய பயணத் திட்டம் நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறையில் பல்வேறு புதிய மாற்றங்களை உருவாக்குமென வும் ஆட்சியர் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை கூடுதல் இயக்குநர் ஜெகதீஷ்குமார், உதகை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சாந்தி, ஊர்த் தலைவர் டி.முருகன், ஜே.எம்.போஜன், நந்தி கவுடர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். துணை வேளாண்மை அலுவலர் சந்திரன் நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகளை கவரும் வேளாண் கண்காட்சி</u>**



கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில், நேற்று துவங்கிய தென் மண்டல வேளாண்மை கருத்துக்காட்சி மற்றும் உழவர் தின விழாவில், விவசாயிகளை கவரும் ஸ்டால்கள் பல இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த வேளாண் பல்கலை மற்றும் விவசாயிகளின், 50 ஸ்டால்கள் பார்வையாளர்களை கவரும் வகையில் இடம்பெற்றுள்ளன. இதில், மகசூலுக்கு கோ-0212, 06022 ரக கரும்பு! மற்றும் பிலிப்பைன்ஸ் தேங்காய், 'பவர்' இல்லாத பிரிட்ஜ் இடம் பெற்றிருந்தது. இதில் தர்மபுரி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் இடம்பெற்றுள்ள, காய்கறிகளை சேமிக்க உதவும் மின்சாரமற்ற கலன் கவர்கிறது. கலனை சுற்றியுள்ள நார்களில், தண்ணீர் சேமிக்கப்படுவதால், அவை குளிர்பதன சாதனமாக செயல்படுகிறது. சாதாரண அறையில் நிலவும் வெப்பநிலையை

காட்டிலும், 8 - 10 டிகிரி குறைவாக இருக்கும். எளிதில் எடுத்துச்செல்லும் வசதியுள்ள இக்கலனில், 7 - 12 நாட்கள் வரை காய்கறிகளை வைத்திருக்கலாம்.

## <u>சராசரியை விட கூடுதல் மழை; திருப்பூர் மாவட்டத்தில் பதிவு</u>

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில், கடந்தாண்டு 123.7 மி.மீ., மழை, கூடுதலாக பெய்துள்ளது; இது, ஆண்டு சராசரியை விட அதிகம். திருப்பூர் மாவட்டத்தில், 1.98 லட்சம் எக்டேர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது. மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 602.45 மி.மீ., 2011ல், 748.22 மி.மீ., பெய்தது. 2012ல், 365.29; 2013ல், 303.16 மி.மீ., மட்டுமே பெய்தது. கடந்த 2 ஆண்டுகளாக, இயல்பை விட குறைவாக மழை பெய்ததால், வறட்சி ஏற்பட்டது; வேளாண் உற்பத்தி, பால் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு பாதிக்கப்பட்டது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டது.கடந்த 2014ல், மாவட்டத்தில் பசுமை திரும்பியது. ஜன., - பிப்., மாதங்களில் பெய்ய வேண்டிய குளிர்கால மழை பொய்த்தது. இருப்பினும், மார்ச் முதல் மே வரையிலான கோடை மழை, 132.22 மி.மீ., ஆக பதிவானது. ஜூன் முதல் செப்., வரையிலான தென்மேற்கு பருவ மழை 247.39 மி.மீ., பெய்தது; இது, சராசரியை விட, 122.18 மி.மீ., கூடுதல். கடந்த அக்., முதல் டிச.,வரையிலான வட கிழக்கு பருவ மழை, 346.54 மி.மீ., பெய்தது. இதுவும், சராசரி மழையை விட, 2.54 மி.மீ., அதிகம். மொத்தத்தில், கடந்தாண்டு 726.15 மி.மீ., மழை பதிவானது; இது, ஆண்டு சராசரியை விட, 123.7 மி.மீ., கூடுதல்.வழக்கமாக திருப்பூர் மாவட்டத்தில், வட கிழக்கு பருவ மழை அதிகமாக பெய்யும். ஆண்டு மழைப்பொழிவில் இதன் பங்களிப்பு 57.1 சதவீதமாகவும், தென்மேற்கு பருவ மழை பங்களிப்பு 20.8 சதவீதமாகவும், கோடை மழை பங்களிப்பு 20.6 சதவீதமாகவும் இருக்கும்.கடந்தாண்டு, கோடை மற்றும் தென்மேற்கு பருவ மழை, கூடுதல் பங்களிப்பை வழங்கியுள்ளன. வட கிழக்கு பருவ மழை, இயல்பான அளவில் பெய்தது. கோடை மற்றும் தென்மேற்கு பருவ மழையால், கடந்தாண்டு சராசரியை விட கூடுதலாக பெய்துள்ளது. வேளாண் துறை

அதிகாரிகள் கூறும்போது, "இயல்பை விட கூடுதலாக மழை பெய்ததால், வறட்சி மாறி, சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது; நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்துள்ளது. இருப்பினும், சரியான நேரத்தில் பருவமழை பெய்யாதது ஏமாற்றமே. ஜன., - ஏப்.,வரை முதல் 4 மாதங்கள் மழையில்லை. ஜூன், ஜூலை மற்றும் நவ., - டிச.,மாதங்களிலும் போதிய மழை பெய்யவில்லை,' என்றனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு இன்று பயிற்சி முகாம்

தஞ்சாவூர்: நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவ பயிற்சி முகாம், தஞ்சையில், இன்று நடக்கிறது. தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பேராசிரியர் புண்ணியமூர்த்தி வெளியிட்ட அறிக்கை: தஞ்சை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக் கழகத்தின், தஞ்சை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், இன்று(7ம் தேதி) நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் காலை, 9 மணிக்கு நேரில் வரவேண்டும். கூடுதல் தகவல் அறிய பேராசிரியர், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகில், தஞ்சை என்ற முகவரிக்கு வரவேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

## 12 கன்றுகளை ஈன்ற அதிசய பசு



அன்னைக்கு இணையானது பசு. உணவில் பால் முக்கிய பங்கு வகிக்கிறது. உடலுக்கு புரதச்சத்து முக்கியம் என்பதால் "பால் இல்லையே வாழ்க்கையே பாழ்' என்பர். பால் தவிர்க்க இயலாத ஒன்று. விவசாயிகளின் வாழ்வாதாரமே பசுக்கள் தான். பசு மாடு இருக்கும் வீடு குதூகலிக்கும் என்பது அனுபவ

ரீதியான உண்மை. நாளுக்கு நாள் பால் தேவை அதிகரித்து வருவதால் விவசாயிகள் பலர் பால் பண்ணை நடத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கறவை மாடுகள் வளர்ப்பின் மூலம் மாதம் ரூ.பல லட்சம் லாபம் மட்டுமே ஈட்டும் அழிவில்லா ஒரே தொழில் பசு மாடு வளர்ப்பு. மதுரை அலங்காநல்லூர் அருகே கல்லனையை சேர்ந்தவர் பார்த்திபன். வீட்டிலேயே சிறிய பால் பண்ணை நடத்தி வருகிறார். ஐந்து கறவை மாடுகள் மூலம் தினமும் 70 லிட்டர் கறந்து விற்கிறார். பசுவின் வாழ்நாள் அதிகபட்சம் 20 ஆண்டுகள். பார்த்திபன் வளர்க்கும் ஜெர்சி கலப்பின பசு, ஆண்டுக்கு ஒன்று என இதுவரை 12 கன்றுகளை ஈன்றுள்ளது. தற்போது தனது 18 வது வயதில் 13வது ஈற்றில் உள்ளது. பொதுவாக பசு ஒன்று 7 அல்லது 8 வரை கன்றுகள் ஈனும். 13 அல்லது 14வது வயதில் ஈற்று நின்று விடும். பார்த்திபன் வளர்க்கும் பசு இப்படி கன்றுகளை ஈன்று வருவது கால்நடை மருத்துவர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருகிறது. காரணம் பசுவை பராமரிக்கும் பார்த்திபனின் வளர்ப்பு முறை தான் என கால்நடை மருத்துவர்கள் கூறுகின்றனர். பார்த்திபன் கூறுகையில், "கழிவு நீரில் வளர்க்கும் புற்களை பசுக்களுக்கு கொடுக்க மாட்டேன். ஒத்திக்கு நிலம் வாங்கி புல் வளர்க்கிறேன். பசுக்களை நடக்க வைத்து மேய்ச்சலுக்கு விடுகிறேன். இதனால் பசுக்கள் உடல் ஆரோக்கியத் துடன் வளர்கிறது. தொழுவம் சுத்தமாக பராமரிக்கப்படுவதால் நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது. பசுக்களை தாயை போல் பாதுகாக்கிறேன். இதன் காரணமாகவே நான் வளர்க்கும் பசு தனது இறுதி காலத்திலும் செயற்கை முறை சினை முறைப்படி ஆண்டு தோறும் கன்றுகளை ஈன்று வருகிறது. 12 கன்றுகளை ஈன்ற பசுவின் மகள், பேத்தி, கொள்ளுப்பேத்தி என பண்ணையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த பசுக்கள் மட்டுமே உள்ளன," என்றார். செய்யும் தொழிலே தெய்வம். எந்த தொழிலாக இருந்தாலும் அதில் உண்மை, உழைப்பு, நேர்மை இருக்க வேண்டும். கால்நடை வளர்ப்பில் வரலாற்று சாதனை படைத்து வரும் பார்த்திபன் போன்றவர்களை ஊக்கமளித்து அரசு அங்கீகரிக்கும்

பட்சத்தில் பல பார்த்திபன்கள் உருவாவது உறுதி. மேலும் அறிய 98658 70439ல் பேசலாம். **-கா.சுப்பிரமணியன், மதுரை.**

<u>**நவீன தொழில்நுட்பம்**</u>



**திசு வளர்ப்பு வாழை சாகுபடி நுட்பங்கள் :** திசு வளர்ப்பு வாழை என்பது தேர்வு செய்யப்பட்ட தாய் மரத்திலிருந்து அதன் பண்புகளை ஒத்த சேய் அல்லது மிகச் சிறிய பக்கக்கன்றுகளாய் பிரித்தெடுத்து, அதற்கு தேவையான ஊட்டச்சத்துக் கள், ஈரப்பதம், ஒளி, வெப்பநிலை ஆகியவற்றை தேவையான அளவில் கொடுத்து, ஆய்வக சூழலில் அதிக அளவிலான கன்றுகளை உருவாக்கும் முறைக்கு திசு வளர்ப்பு முறை என்றும் அக்கன்று திசு வளர்ப்பு வாழைக் கன்றுகள் என்றும் அழைக்கப்படுகிறது. திசு வளர்ப்பு முறையில் ஒரு வாழைக்கன்றிலிருந்து குறைந்த பட்சமாக 500-700 கன்றுகளை உற்பத்தி செய்ய முடியும். திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்படும் கன்றுகள் நச்சுக்கிருமி மற்றும் மரபணு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அரசு தரச்சான்றிதழ் வழங்கப்படுவதால் விவசாயிகள் நோயற்ற கன்றுகளைப் பெற முடியும். வாழைக்கட்டைகளுடன் ஒப்பிடும் போது 20-30 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்கு வந்து விடும். திசு வளர்ப்பு வாழையின் அதிக விலை காரணமாக சிறு மற்றும் குறு விவசாயிகளிடையே இதன் பயன்பாடு சற்று குறைந்து காணப்படுகிறது.

**நாற்றங்காலில் பராமரிப்பு :** முப்பது நாட்கள் வரை முதல்நிலை பக்குவப்படுத்தப்பட்ட கன்றுகளை குறைந்தது ஒன்று முதல் ஒன்றரை மாதங்கள். இரண்டாம் நிலை நாற்றங்காலில் பராமரிப்பது அவசியம். முதலில் செம்மண், மணல், தொழுஉரம் அல்லது மண்புழு உரம் 1:1:1 என்ற விகிதத்தில் கலந்து அத்துடன் 100 கிலோ தொட்டிமண் கலவைக்கு 1/2 கிலோ என்ற விகிதத்தில் பியூரடான் குருணை மருந்தினை கலந்து கிருமி நாசினியான பார்மால்டிஹைடு 100 மிலி அளவில் தெளித்து இந்த தொட்டிக் கலவையை

உபரி தண்ணீர் வெளியேறுவதற்கு போதுமான துவாரங்கள் ஏற்படுத்தப்பட்ட 150 திட அளவுடைய கருப்பு நிற பாலிதீன் பைகளில் நிரப்பப்பட வேண்டும். பாலிதீன் பைகளில் தண்ணீர் ஊற்றி ஈரம் செய்த பிறகு மண்ணில் நடுவே சிறிய துளையினை ஏற்படுத்தி கன்றுகளின் வேர்ப்பகுதிக்கு பாதிப்பு இல்லாதவாறு நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 3ம் நாள் உயிர் நீர் ஊற்ற வேண்டும். ஊட்டச்சத்து மிக்க 19:19:19 என்ற உரக்கலவையை கன்று ஒன்றுக்கு 50-100 மிலி வீதம் ஊற்ற வேண்டும். திசு வளர்ப்பு வாழைக்கன்றுகள் 45-60 நாட்களில் முதிர்ச்சி பெற்று நடவு செய்ய தயாராகிறது. நடவும் பராமரித்தலும் : கன்றுகளைத் தேர்வு செய்யும் போது குறைந்தது 20-30 வளர்ச்சியடைந்த வேர்கள் இருப்பது அவசியம். கன்றுகளின் வேர்ப்பகுதியைத் தாக்கும் நுண்கிருமிகளான எர்வீனியா மற்றும் நூற்புழுக்களின் தாக்கம் பற்றி ஆய்வு செய்து, வளர்ச்சியில் வேறுபட்ட கன்றுகளை கண்டறிந்து தரமற்ற கன்றுகளை நீக்குவதன் மூலம் நோய்கிருமிகள் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம். நாற்றங்காலில் 45-60 நாட்கள் பராமரிக்கப்பட்ட கன்றுகள் விளைநிலத்தில் நடவு செய்யும் பருவத்தை அடைகின்றன. வயல்வெளியில் நடவு செய்வதாக இருப்பின் 1/4 அடி ஆழமும், 1 அடி அகலமும் கொண்ட குழிகள் தோண்டி, மாலை நேரங்களில் நடவு செய்ய வேண்டும். பாலிதீன் பையைக் கிழித்து வேர்களுக்கு எவ்வித சேதமும் இல்லாமல் குழியின் நடுவே வைத்து, சுற்றிலும் தொழு உரம், நுண்ணுயிர் உரத்தினை தாய் மண்ணுடன் கலந்து குழியை நிரப்பி நன்கு நீர் விட வேண்டும். கன்றுகளை நடவு செய்த 3ம் நாள் 10 கிராம் கார்போ பியூரான் குருணை மருந்தும் 500 மிலி 0.5 சதம் எமிசான் கரைசல் கொடுப்பதன் மூலம் நூற்புழு மற்றும் வேர் அழுகல் நோயினைக் கட்டுப்படுத்த முடியும். கோடைகாலங்களில் கன்றுகளை நடவு செய்யும் பொழுது பனை அல்லது தென்னை ஓலையைக் கொண்டு நிழல் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். கன்றுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை 7 பாகங்களாக பிரித்து, ஒன்றாம் மாதத்திலிருந்து, மாதத்திற்கு ஒருமுறையே இட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அதிக மகசூலை பெற முடியும். விவசாயிகள் திசு வளர்ப்பில் அடர் நடவு முறை மற்றும் நீர்வழி உரமிடுதல் போன்ற உயர்

தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பது அதிக லாபம் பெறலாம். **தகவல் :** இயக்குநர், தேசிய வாழை ஆராய்ச்சி மையம், தோகைமலை ரோடு, தயனூர் அஞ்சல், திருச்சிராப்பள்ளி-620 102. போன் : 94435 90188 (முனைவர் எம்.எஸ்.சரஸ்வதி). - *டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.*

## <u>நிலத்தடி நீர் காப்போம்</u>



ஒரு ரூபாய் செலவு இல்லாமல் உருவான 150 அடி நீளம் 10 அகலம் 40 அடி ஆழம் கொண்ட மழைநீர் சேகரிப்பு குளத்தை கிணறாக வெட்டிய சாதனை விவசாயி. கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ராம பட்டினம் பஞ்சாயத்து, ஜலந்தூர் பிரிவில் வசிக்கும் விவசாயி செல்வராஜ். இவர் தனது தோட்டத்தில் மேற்கூறிய அளவில் குளம் வெட்டியுள்ளார். சென்ற 2007 ஆம் ஆண்டு அம்மாவின் ஆட்யில் மண்ணூர் கிராம நீரினைப் பயன்படுத்துவோர் சங்க தலைவராக சக்திவேல் இருந்த போது பொறியியல் துறை மூலமாக அம்மாவின் மேலான ஆணைக்கிணங்க 100 அடி நீள அகலம் 5 அடி ஆழம் கொண்ட மழைநீர் சேகரிப்பு குளம் அமைத்து கொடுக்கப்பட்டது. தனது சொந்த நலனை விட மற்ற விவசாயிகளின் நலனை மனதில் கொண்ட இந்த விவசாயி இக்குளத்தை மெல்ல, மெல்ல ஆழப்படுத்தினார். தங்களின் தேவைகளுக்கு மண் தேவைப்படுவோர், சொந்த செலவில் மண் அள்ளிக் கொள்ள வேண்டும். ஏழை எளியோருக்கு மண் இலவசம். நாளடைவில் 40 அடி ஆழம் சென்று விட்டது. தனது கை காசு ஒரு ரூபாய் செலவில்லாமல் வெட்டப்பட்டுள்ள இக்குளத்தில் எல்லா காலத்திலும் 30 அடிக்கும் குறையாமல் தண்ணீர் எப்பொழுதும் இருக்கின்றது. மேலும் இக்குளத்தில் 4000 மீன் குஞ்சுகளும் வளர்க்கின்றார். ஆழியார் பாசன திட்டத்தில் ஒரு மடை விட்டு ஒரு மடை நீர்ப்பாசன முறை உள்ளது. எனவே கிணறாக மாறிய குளத்தில் எப்போதும் நிறைவாகவே உள்ளது. அரசு

எத்தனையோ செலவு செய்து மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை விளம்பரப் படுத்தினாலும் மக்களும் விவசாயிகளும் அலட்சியப்படுத்துகின்றனர். இத்திட்டத்தின் மூலம் மிகுந்த பயன் அடைந்த இந்த விவசாயி தனது 10 ஏக்கர் தோப்பில் 3000 வாழைகள் நட்டு சொட்டு நீரில்லாமல் பாசனம் செய்து வருகின்றார். தென்னையும், வாழையும் இத்தனை கொடுமையான வறட்சி காலத்திலும் பசுமையாக காட்சியளிக்கின்றது. அரசின் சலுகைகளை பெறவும் வங்கிக்கடன் பெறவும் கல்விக்கடன் பெறவும் ஒவ்வொரு விவசாயம் தன் தோட்டத்தில் குளம் வெட்டியிருக்க வேண்டும் என்ற சட்டம் கட்டாயமாக்கப்பட வேண்டும். ஊடகங்களும், மீடியாக்களும் பொறியியல் துறை கல்வியில், அரசியலில், தொழிலில் சாதனை செய்வோரை முன்னிறுத்தி விளம்பரங்கள் செய்கின்றன. ஆனால் வேதனையில் கிடக்கும் சாதனை விவசாயிகளை கண்டு கொள்வதில்லை. மழைநீர் சேகரிப்பு குட்டைகளை அமைத்து மழை காலங்களில் வெளியேறும் உபரிநீர் ஆற்றிலும் அதன் மூலம் கடலிலும் கலக்காமல் இருக்கவும் வழி செய்து நிலத்தடி நீர்மட்டம் உயர ஒவ்வொரு விவசாயி தன் சொந்த முயற்சியில் அரசின் உதவியோடு "பண்ணைக்குட்டைகள்" அமைத்தால் நாமும் நமது சந்ததிகளும் நலமாக வாழலாம். தனது 10 ஏக்கர் தோட்டத்தில் 700 தென்னைகள், 4000 மீன்கள், 10000 கோழிகள், 10 மாடுகள், 3000 வாழைகள் ஆகியவைகளை நல்ல முறையில் பராமரித்து செயற்கை உரத்தை பயன்படுத்தாமல் சாணம் மற்றும் கோழி எரு போன்ற இயற்கை உரத்தை மட்டுமே பயன்படுத்தி இயற்கையோடு இணைந்து வாழ்ந்து அரசின் மழைநீர் சேகரிப்பின் பயனால் தன்னிறைவு அடைந்த இந்த விவசாயின் சாதனையை நேரிலும், முகநூல் (Face book) மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம். இவரை தொடர்பு கொள்ள : 97157 87777

- **ஆர்.செல்வராஜ்.** koraiselvanma@gmail.com

<u>பாலாற்றின் குறுக்கே விரைவில் அணை கட்ட ஏற்பாடு</u>

நகரி: சித்துார் மாவட்டம், குப்பம் பகுதியில் செல்லும் பாலாற்றின் குறுக்கே, அணை கட்டுவதற்கு, மத்திய பொறியியல் குழு அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். இவர்கள், அணை கட்டும் பகுதியில் பணிகள் துவங்குவது குறித்து,

பரிசீலனை செய்தனர். பின், நிருபர்களிடம் கூறியதாவது: தற்போது, பாலாற்றின் குறுக்கே அணைகள் கட்டும் பிரச்னை, உச்ச நீதிமன்றத்தில் உள்ளதால், 10 ஆண்டுகளாக திட்டப் பணிகளை துவங்க முடியவில்லை. கர்நாடக மாநிலம், பேதமங்கலம் பகுதியில் இருந்து துவங்கும், பாலாற்றின் மத்தியில், குப்பம் பகுதியில் அணை கட்டினால், இப்பகுதியில் விவசாயத்திற்கு, 36 கி.மீ., துாரத்திற்கு தண்ணீர் வசதி கிடைக்கும். இம்மாதம் இறுதி வரை, உச்ச நீதிமன்றத் தில் வழக்கு விசாரணை உள்ளது. அதன்பின், திட்டப் பணிகள் விரைவாக துவங்க, நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

## தக்காளி விலை உயர்வு

வெள்ளகோவில் : வெள்ளகோவிலில் பிரதிவாரம் ஞாயிற்றுக்கிழமை வாரச்சந்தை கூடுகிறது. இங்கு தக்காளி, கடந்த வாரம், கிலோ, பத்து ரூபாய்க்கு விற்பனையானது. திடீரென ஒரு மடங்கு விலை உயர்ந்து, இந்த வாரம், கிலோ, 20 ரூபாய்க்கு விற்பனையானது.பச்சைமிளகாய், கிலோ, 35, பெரிய வெங்காயம், 25 முதல், 30, சின்ன வெங்காயம், 25, சுரைக்காய் ஒன்று, 10, புடலங்காய் கிலோ, 25, கேரட், 50, பீன்ஸ், 40, பீட்ரூட், 40, கத்தரிக்காய், 40, அவரைக்காய்,30, பூசணிக்காய் ஒரு கிலோ, பத்து ரூபாய், கொத்துமல்லி பெரிய கட்டு, ஐந்து முதல், பத்து ரூபாய், புதினா, ஐந்து ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த வாரத்தை விட, தக்காளி விலை, பத்து ரூபாய் உயர்ந்து, 20 ரூபாய்க்கு விற்பனையானதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நெல் பயிர்கள் வளர்ச்சி குன்றியது குறித்து உத்தமபாளையத்தில் விஞ்ஞானிகள் ஆய்வு

உத்தமபாளையம் : நடவு செய்த நெல் பயிர்கள் வளராமல் குன்றி வருவதற்கான காரணத்தை தெரிந்து கொள்வதற்காக பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரியை சேர்ந்த பூச்சியியல் மற்றும் நோயியல்

விஞ்ஞானிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். கம்பம் பள்ளத்தாக்கில் இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவமழை பெய்து, அணையின் நீர் மட்டம் 142 அடியானது. விவசாயிகள் மகிழ்ச்சியுடன் முதல் போகத்தை எடுத்தனர். இரண்டாம் போகத்திலும் பிரச்னையிருக்காது என்று நினைத்திருந்த விவசாயிகளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. உத்தமபாளையம் பகுதியில் பெரும்பாலன விவசாயிகள் கடந்த ஆண்டு நல்ல விளைச்சலை தந்த ஜே.சி.எல் (ஜலகல்) என்ற ரகத்தை தற்போது பயன்படுத்தினர். நடவு முடிந்து ஒரு மாதத்தை கடந்தும், பயிர் வளர்ச்சியில்லாமல் இருந்தது. மேலும் கருகி குன்றத் துவங்கியது. இதனால் விவசாயிகள் மத்தியில் பலத்த அதிர்ச்சி ஏற்பட்டது.விவசாயத்துறை அதிகாரிகள் மருந்துகள் பரிந்துரை செய்தும் பலன் இல்லை. எனவே பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி பூச்சியியல் உதவி பேராசிரியர் சுரேஷ், நோயியல் உதவி பேராசிரியர் விஜயசாமுண்டீஸ்வரி ஆகியோர் நேற்று உத்தமபாளையம் நெல் வயல்களில் ஆய்வு மேற்கொண்டனர். அவர்கள் கூறியதாவது: கூட்டுப்புழு மற்றும் இலைச் சுருட்டு புழு தாக்குதல் உள்ளது. குலைநோய் தாக்குதலும் காணப்படுகிறது. சீதோஷ்ண நிலை மாற்றத்தால் தான் இந்த புழுக்கள் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட இந்த ஜே.சி.எல். ரகத்தில் மட்டுமே கூட்டுப்புழுக்கள் தாக்குதல் காணப்படுகிறது. ரஜினி மற்றும் 509 ரகங்களில் கூட்டுப்புழு தாக்குதல் இல்லை.கூட்டுப் புழுக்களை கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 500 மிலி ஒரு ஏக்கருக்கு அல்லது பிரசன்னபாஸ் 200 மிலி தெளிக்க வேண்டும். இலைச்சுருட்டு புழுக்களை கட்டுப்படுத்த புளூ டென்டமைடு 40 மில்லி ஒரு ஏக்கருக்கு அல்லது பிப்ரோனில் 20 கிராம் ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். இலைச்சுருட்டு புழுக்களை கட்டுப்படுத்த டிரைசாக்குளோசல் ஒருமில்லி ஒரு லிட்டர் தண்ணீரிதல் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது கார்பண்டைசிம் ஒரு கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஜே.சி.எல். ரகம் முதல் போகத்திற்கு

மட்டுமே ஏற்றது என்றும், இரண்டாம் போகத்திற்கு ஏற்றது அல்ல என்றும் உத்தமபாளையம் உதவி இயக்குநர் ராஜமனோகரன் தெரிவித்தார்.

## 19,704 பருத்தி மூட்டை ரூ.3 கோடிக்கு வணிகம்

ஆத்தூர் : ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும், பருத்தி, மஞ்சள் மற்றும் தானியங்கள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி பகுதி மட்டுமின்றி, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, திட்டக்குடி, பெரம்பலூர் பகுதியை சேர்ந்த, ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், 19,704 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர், ஆத்தூர் பகுதியை சேர்ந்த, 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டனர். பி.டி., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சம், 4,219 ரூபாய், குறைந்தபட்சம், 3,529 ரூபாய், டி.சி.ஹெச்., ரகம் குவிண்டால் அதிகபட்சம், 5,001 ரூபாய், குறைந்தபட்சம், 4,379 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகள் கொண்டு விற்பனைக்கு கொண்டு வந்த, 19,704 பருத்தி மூட்டைகள், 3 கோடியே, 7,603 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

## வணிக வளாகத்தில் 28 டன் சின்ன வெங்காயம் ஏலம்

பெரம்பலூர்: செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம், 110 விவசாயிகள், சின்ன வெங்காயத்தை திறந்த முறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். அதில், 15 வியாபாரிகள், 443 மூட்டை, (28,584 கிலோ) வெங்காயத்தை அதிகபட்சமாக கிலோ, 27 ரூபாய்க்கும், விதை வெங்காயத்தை கிலோ, 32 ரூபாய்க்கும் ஏலத்தில் எடுத்தனர். இதன் மூலம், 28 டன் சின்ன வெங்காயம், 4 லட்சத்து, 46 ஆயிரத்து, 964 ரூபாய்க்கு விற்பனையானது.

## கடலை செடிகள் செழிப்பு; விவசாயிகள் மகிழ்ச்சி

கமுதி : கமுதி பகுதியில் செம்மண் நிலங்களாக இருப்பதால்,பரவலாக நிலக் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு, பருவமழை தாமதமாக துவங்கினாலும், மார்கழி, கார்த்திகை மாதங்களில் அவ்வப்போது நிலக்கடலை, விவசாயத்திற்கு தேவையான மழைநீர் கிடைத்ததால், கமுதி அருகேயுள்ள பசும்பொன், கடம்பன்குளம் பகுதிகளில் நிலக்கடலை செடிகள் நன்கு வளர்ந்துள்ளன. இதுகுறித்து விவசாயி தங்கராஜ் கூறுகையில், "கடம்பன்குளம் பகுதியை சுற்றிலும், சுமார் 100 ஏக்கருக்கு மேல் நிலக்கடலை விவசாயம் செய்யப்பட்டு உள்ளது. இந்தாண்டு விவசாயத்திற்கு தேவையான நேரங்களில் மழை பெய்ததால், கடலை விவசாயம் அமோகமாக உள்ளது. இன்னும் சில வாரங்களில், நிலக்கடடை மகசூல் நிலையை அடைந்துவிடும். கண்மாய்களில் தேங்கியுள்ள தண்ணீரை வைத்து, நிலக்கடலை மகசூலை முழுமையாக அடைந்து விடுவோம்," என்றார்.

## ரூ. 60 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்; 16 ஆயிரம் தொட்டதால் மகிழ்ச்சி

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. அதில், பனங்காலி ரகம், 16 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலை போனதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில், 65

கிலோ கொண்ட, 1,026 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10,621க்கும், குறைந்த பட்சம், 7,079 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,489க்கும், குறைந்த பட்சம், 7,011 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16,009க்கும், குறைந்த பட்சம், 12, 699 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது. கடந்த வாரம் வரை, பனங்காலி ரகம், குவிண்டால் 10 ஆயிரம் ரூபாய் குறைந்தப்பட்ச விலை நிர்ணயம் செய்த நிலையில், நேற்று, 16 ஆயிரம் ரூபாய்க்கு மேல், அதிகப்பட்ச விலை போனதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஒருங்கிணைந்த வேளாண் திட்டம்; மோகனூர் யூனியனில் துவக்கம்

மோகனூர் : சட்டசபையில், 110 விதியின் கீழ், ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டம் செயல்படுத்தப்படும் என, தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து, மோகனூர் யூனியனில், ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டத்தின் கீழ், குழு சார்ந்த நிரந்தர பயண திட்டம் துவக்க விழா, ஆரியூர் மற்றும் ஒருவந்தூர் பஞ்சாயத்தில் துவக்கி வைக்கப்பட்டது. மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) லோகநாதபிரகாசம் முன்னிலை வகித்தார். குழுசார்ந்த நிரந்தர பயணத்திட்டம் மற்றும் வேளாண் உதவி அலுவலர் பணிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள், விவசாயிகளுக்கு தேவையான உயர் தொழில் நுட்பங்கள், அரசு வழங்கும் மானியத் திட்டங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து, கலெக்டரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணகுமார், மோகனூர் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கத்திடல், நெல் விதைப்பண்ணை வயல்கள், துவரை செயல்விளக்கத் திடல், துவரை விதை பண்ணை வயல்கள் ஆகியவற்றை நேரில்

பார்வையிட்டு ஆய்வு செய்தார்.மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் கந்தசாமி, வேளாண் அலுவலர் ஹேமலதா ஆகியோர், அரசின் பல்வேறு திட்டங்கள் பற்றியும், வட்டாரத்தில் செயல் விளக்கத்திடல், விதை பண்ணை அமைப்பால் ஏற்படும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினர்.முன்னோடி விவசாயிகள், அம்மா பண்ணை மகளிர் குழு விவசாயிகள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மோகன்ராஜ், ராதாகிருஷ்ணன் ஆகியோர் செய்தனர்.

**<u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

நரிக்குடி : நரிக்குடி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் 2014-15 ம் ஆண்டு விதைக் கிராம திட்டத்தின் கீழ் மானூர் மற்றும் மறையூர் பகுதிகளில் நெல் சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி நடந்தது. வேளாண் அலுவலர் ஜெயசந்திரா , நெல் பயிறுக்கான தொழில் நுட்பங்களான தரமான விதை தேர்வு செய்தல், விதைக்கும் முன் விதை நேர்த்தி செய்யும் முறை, அதன் நன்மைகள் குறித்தும் பேசினார். துணை வேளாண்மை அலுவலர் கல்யாணி விதைப்பண்ணை அமைப்பதற்கான முறைகள் குறித்து விளக்கினார். மானூர் , மறையூர் ஊராட்சி தலைவர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் ஊர்காவலன், சாமிக்கண்ணு, கணபதி ஏற்பாடு செய்திருந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அணைக்கட்டு அருகே ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டம் தொடக்கம்</u>**

வேலூர், : அணைக்கட்டு அடுத்த தெள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டத்தின் துவக்க விழா நேற்று நடந்தது. விதை சான்று வேளாண் உதவி இயக்குனர் பாண்டே தலைமை தாங்கி திட்டத்தினை தொடங்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குனர்

கிரிஷ்சந்திரசேகர் வேளாண் அலுவலர்கள் பிரீத்தா, மாரியப்பன், உட்பட பலர் கலந்துகொண்டனர். வேளாண் விரிவாக்க திட்டத்தின் கீழ் 22 ஊராட்சிகளுக்கு 5 உதவி வேளாண் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு ஊராட்சிக்கும் சென்று காலை முதல் மாலை வரை ஊராட்சி மன்ற அலுவலகம் அல்லது விஏஓ அலுவலகத்தில் பணியில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அலுவலர்கள் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களை ஆய்வு செய்து தொழில்நுட்ப செய்திகள் மற்றும் விவசாய திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைப்பதோடு, விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை காண்பார்கள்.

## ரூ.27லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், : சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலை ரூ.27 லட்சத்துக்கு ஏலம் போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், நிலக்கடலை வரத்து அதிகரித்து 2220 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.4730 முதல் ரூ.5000 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ.4350 முதல் ரூ.4640 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ.3300 முதல் ரூ.3850 வரையிலும், ஏலம் போனது. மொத்தம் ரூ.27 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நேற்று நடைபெற்றது. மணப்பாறை, ஈரோடு, திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் இருந்து 12 வியாபாரிகளும், ராமியம் பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர்,மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து 231 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர். இந்த தகவலை சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளார் சரவணன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறை தீர் கூட்டம் 21ம் தேதி நடக்கிறது

ஊட்டி, : நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ம் தேதி ஊட்டியில் கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. தோட்டக்கலைத்துறை

இணை இயக்குநர் மணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ம் தேதி ஊட்டியில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. காலை 10.30 மணிக்கு கூட்டம் துவங் கும். கூட்டத்திற்கு கலெக் டர் சங்கர் தலைமை வகிக்கிறார். பல்வேறு துறை அதிகாரிகள் கலந்துக் கொள்கின்றனர். எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகள், விவசாயம் சம்பந்தப்பட்ட பொதுவான கோரிக்கைகளை தவிர்க்க வேண் டும். விவசாயம் சம்பந்தப்பட்ட நீர்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கை களை மட் டும் தோட் டக்கலை இணை இயக்குநர் தபால் பெட்டி எண். 72 ஊட்டி 643001 என்ற அலு வலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவே அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு இணை இயக்குநர் மணி கூறியுள்ளார்.

**துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம்**

திருச்சி, : திருச்சி மாவட்டம், துறையூரில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி மறைமுக ஏலம் நாளை (7ம் தேதி) நடைபெறுகிறது. இதில் எந்தவித கமிஷனுமின்றி விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட உள்ளது. எனவே, துறையூர், முசிறி, உப்பிலியபுரம், புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், தொட்டியம் ஆகிய வட்டாரங்களில் பருத்தி சாகுபடி அறுவடை செய்து விற்பனைக்கு வைத்திருக்கும் விவசாயிகள், தாங்கள் விளைவித்த பருத்திகளை கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் கலந்து கொள்ளலாம். இதில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர் களுக்கான பணம் உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்படுவதுகுறிப்பிடத்தக்கது.

**இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருவாய் குறிக்கோளுடன் வேளாண் குழுவினரின் களப் பயணம் துவக்கம்**

திருச்சி, : இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருவாய் என்ற குறிக்கோளுடன் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் நேற்று துவங்கியது. திருச்சி மாவட்டத்தில் உள்ள 415 உள்ளாட்சி அமைப்புகளில் 84

தொகு திகள் உருவாக்கப்பட்டு அவைகள் 672 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்துக்கும் 48 பகுதி கள் வீதம் 8 பகுதிக்கு ஒரு வேளாண் உதவி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளை உள்ளடக்கிய விவசாய குழுக்கள் பயிர் ஆர்வலர் குழுக்கள், அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் மற்றும் விவசாய ஆர்வலர் குழுக்களை நேர டியாக மாதத்திற்கு இரு முறை சந்தித்து வயலாய்வு செய்து, பருவத்திற்கு ஏற்ற பயிர் சார்ந்த உயர் தொழில் நுட்பங்களை எடுத்துக்கூறி செயல் விளக்கம் அளித்து, வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த சகோதர துறைகளில் செயல் படுத்தப்படும் மானியத் திட்டங் களை எடுத்துக் கூறி பயனடையச் செய்தல் மற்றும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வேளாண் விரி வாக்க மையங்கள் மூலம் விநியோகிக்கப்படும் இடு பொருள் பற்றிய விவரங் களை எடுத்துக் கூறி அதற் கான பரிந்துரையை அப்பகுதியிலேயே பெற்றுக்கொள்வர். இத்திட்டத்தில் பயணம் மேற்கொள்ளும் வேளாண் உதவி அலுவலர்கள் தொடர்பு மையத்தில் வரு கையை பதிவுசெய்து விட்டு காலை 9மணி முதல் 12மணி வரை வயல்வெ ளிக்கு சென்று கிராமங்க ளில் பயிர் வாரியாக அமைக்கப்பட்டுள்ள விவசாயிகள் ஆர்வலர்கள் குழுக்களில் உள்ள விவசாயிகளில் குறைந்தபட்சம் 3 விவசாயிகளை சந்தித்து பயிர் நிலைக்கு ஏற்ப தொழில்நுட்ப செய்திகளை எடுத்துக் கூறுவர். மதியம் 12 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை வயல் வெளியில் செய்துகாட்ட வேண்டிய செயல் விளக்கங்களை விவசாயிகளின் வயல்களில் செய்து காட்டி வயல் அளவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளை தீர்த்து வைப்பர். மாலை 3மணி முதல் 5மணி வரை விவசாயிகள் ஆர்வ லர் குழுக்களின் கூட்டத் தைக் கூட்டி அப்பகுதிக்கேற்ற துறை திட்டங்களை விளக்கிக் கூறி உரிய பயனாளிகளை தேர்வு செய்து பரிந் துரை சீட்டு வழங்குவர். மேலும் கிராம ஊராட்சி அலுவலகத்தில் பயிர் தொழில்நுட்பம் சார்ந்த குறுந்தகடுகள் வாயிலாக காணொலி மூலம் விளக்குவர். ஆண்டுக்கு குறைந்தபட்சம் 26 முறை ஒவ்வொரு பகுதிக்கும் பயணம் மேற்கொள்கின்றனர்.

## அறுவடைக்கு தயாராக உள்ள செங்கரும்புகள்

நீடாமங்கலம், :பொங்கல் பண்டிகை வருவதையொட்டி நீடாமங்கலம் பகுதியில் செங்கரும்புகள் அறுவடைக்கு தயாராக உள்ளது. பொங்கல் பண்டிகை என்றால் முதலில் நினைவுக்கு வருவது செங்கரும்பு. பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால் கரும்பு விற்பனையை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருக்கின்றனர். நீடாமங்கலம் அருகில் உள்ள ஆதனூர், பெரிகோட்டை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் செங்கரும்பு அமோகமாக சாகுபடி செய்துள்ளனர். வரும் 15ம் தேதி பொங்கல் பண்டிகை என்பதால் நீடாமங்கலம் பெரியார் சிலை அருகில் கரும்பு விற்பனை நடந்து வருகிறது. 20 கரும்பு உள்ள கட்டு ரூ.350க்கு விற்பனையாகி வருகிறது. கடந்தாண்டு ஏற்பட்ட நஷ்டத்தையொட்டி இந்த ஆண்டு குறைந்த அளவே கரும்பு சாகுபடி செய்யப்பட்டு விளைச்சல் அமோகமாக உள்ளது. வெளியூரிலிருந்து நீடாமங்கலத்துக்கு கரும்பு வரத்து அதிகரித்தால் விலை குறையும் என்று பொதுமக்கள் எதிபார்ப்பில் உள்ளனர்.

## ஆத்மா குழு உறுப்பினர்களுக்கு நன்னீர் மீன் வளர்ப்பில் உணவு மேலாண்மை பயிற்சி

காரைக்கால், : காரைக்கால் வேளாண் துறையின்கீழ் செயல்படும் ஆத்மா முகமையின் மூலம் விழிதியூர் உழவர் உதவியகத்தில் ஆத்மா குழு உறுப்பினர்களுக்கு நன்னீர் மீன் வளர்ப்பில் உணவு மேலாண்மை சிறப்பு பயிற்சி நடந்தது. 6 வாரங்கள் நடைபெறும் பயிற்சி முகாமில் வெள்ளி மீன் ஆத்மா குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் 3ம் வாரமான நேற்று நன்னீர் மீன் வளர்ப்பில் உணவு மேலாண்மை மற்றும் மீன் குஞ்சுகளை தேர்வு செய்தல் பற்றி பயிற்சியாளர் சரவணன் எடுத்துரைத்தார். அப்போது 21 நாட்கள் வளர்ச்சியடைந்த மீன் குஞ்சுகளே வளர்ப்பு குளத்தில் வளர்க்க உகந்த பருவம். மீன் குஞ்சுகள் குளத்தில் வளர்வதற்கு கரிம மற்றும் கனிம உரங்களை பயன்படுத்துதல் முக்கியம். மாதம் ஒரு முறை குளத்தில் சாணம் தெளித்தல், மீன் குஞ்சுகளின் வாயின் அளவை பொறுத்து 0.5 மிமீ முதல் 1.5 மி மீ அளவுடைய தீவனத்தையே வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். முகாமில் ஆத்மா திட்ட

துணை இயக்குனர் முத்துகிருஷ்ணன், அலுவலர் வேம்பு, மேலாளர் புருஷோத்தமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

<u>**விளாத்திகுளத்தில் விவசாயிகளுக்கு மானியத்தில் தார்பாய்**</u>

விளாத்திகுளம், : விளாத்திகுளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்திராணி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: விளாத்திகுளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான தார்பாய் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்போது விளாத்திகுளம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளிலும் பயிறு மற்றும் தானியப்பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இந்நிலையில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் தார்பாய் 50 சதவீத மானியத்தில் விளாத்திகுளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விநியோக்கப்படுகிறது. 30 அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட தரமான தார்பாய்கள் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் 50 சதவீத மானியத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

<u>**தஞ்சாவூர், திருச்சி, அரியலூர் மாவட்டங்களுக்கு மேலும் 40 நாட்களுக்கு நீர் திறப்பு முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு**</u>



மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக தஞ்சாவூர், திருச்சி, அரியலூர் மாவட்டங்களுக்கு மேலும் 40 நாட்களுக்கு நீர் திறக்கப்படும் என்று முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். இதுகுறித்து முதல்-அமைச்சர்

ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- ஏற்கனவே நீர் திறப்பு மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்கள் மூலம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள 42 ஆயிரத்து 736 ஏக்கர் நிலங்களின் பாசனத்திற்காக 15-8-14 முதல் ஏற்கனவே தண்ணீர் திறந்துவிடப்பட்டு, அப்பகுதிகளில் பாசனங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விவசாயிகள் கோரிக்கை தற்போது அப்பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெல், விளைச்சலுக்கு தயாராகாத நிலையில் உள்ளதால் 7-1-15 முதல் 15-2-15 வரை மேலும் 40 நாட்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. மேலும் 40 நாட்களுக்கு அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்கள் மூலம் பாசனத்திற்காக 7-1-15 முதல் 15-2-15 வரை மேலும் 40 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள 42 ஆயிரத்து 736 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தென் தமிழகத்தில் இன்று மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்



தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் 17-ந்தேதி தொடங்கிய வடகிழக்கு பருவமழை கடந்த 4-ந்தேதியுடன் முடிவடைந்ததாக வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. பருவமழைக் காலத்தில் 43 செ.மீ. அளவு மழை சராசரியாக பெய்துள்ளது. வடகிழக்கு பருவமழை முடிவடைந்த நிலையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலையே காணப்படுகிறது. காலை மற்றும் இரவு நேரங்களில் இயல்புக்கு மாறாக கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. தென் தமிழகத்தில் இன்று (புதன்கிழமை) மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை

ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:- தென்மேற்கு வங்கக் கடலை ஒட்டியுள்ள, இந்திய பெருங்கடல் அருகே மேல் அடுக்கு சுழற்சி காணப்படுகிறது. இதன் காரணமாக தென் தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வட தமிழகத்தில் வறண்ட வானிலையே காணப்படும். சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதிகளை பொருத்தமட்டில் வறண்ட வானிலையே காணப்படும். மாலை 6 மணி முதல் காலை 7 மணி வரை பனிப்பொழிவு காணப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம் கலெக்டர் தொடங்கி வைத்தார்



அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கமுறையின் கீழ் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டத்தினை கலெக்டர் சரவண வேல்ராஜ் தொடங்கி வைத்தார். நிரந்தர பயண திட்டம் அரியலூர் மாவட்டம், கடுகூர் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் வேளாண்துறை சார்பில் விவசாயிகள சார்ந்த ஒருங் கிணைந்த வேளாண் விரிவாக்கமுறையின் கீழ், முதல்-அமைச்சரின் ஆணை யின் படி, விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டத்தின் தொடக்க விழா கலெக்டர் சரவண வேல்ராஜ் தலைமை யில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம் பற்றிய விபரங்கள் அடங்கிய துண்டறி க்கைகளை விவசாயிகளுக்குவழங்கிகலெக்டர்பேசியதாவது:-

மும்மடங்குவருமானம்

தமிழகத்தில் இரண்டாவது பசுமைப்புரட்சியை ஏற்படுத் திட வேளாண்மைத் துறை தொடர்ந்து பல்வேறு செயலாக்கப்பணிகளை மேற் கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இரண்டாம் பசுமைப்புரட்சியின் இலக் கான இருமடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்ற குறிக்கோளினை அடையும் பொருட்டு

விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறைத் திட்டம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 201 கிராம பஞ்சாயத்து களில் செயல் படுத்தப்படும். இத்திட்ட விரிவாக்கப் பணிகளை செம்மைப் படுத்த பண்ணை அளவில் விவசாய விளைபொருள் குழுக்களை அமைத்து, உற் பத்தியை அதிகரிப்ப தற்கான தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கவும், பயிர் சாகுபடி தொடர்பான இடர் பாடு களை நீக்கி, உரிய முறையில் விளைபொருட் களை சந்தைப் படுத்திடவும், இரண்டாம் பசுமைப் புரட்சியின் இலக் கினை அடைந்திடவும் விவசா யிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம் உதவிடும். இத்திட்டம் அரியலூர் மாவட்டத்தில் நடைமுறை படுத்தப்படுகிறது. இருவாரங்களுக்கு ஒரு முறை இத்திட்டத்தின் படி, உதவி வேளாண்மை அலுவலர்கள் கிராம பஞ்சாயத்து வாரியாக நிரந்தர பயணத்திட்டம் தயாரித்து, கிராம பஞ்சாயத்து அளவில் அமைக்கப்பட்டுள்ள விவசாய விளைபொருள் ஆர்வலர் குழு உறுப்பினர்களை இரு வாரங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட கிழமைகளில், குறிப்பிட்ட நேரத்தில் சந்தித்து வேளாண் தொழில்நுட்ப கருத்துக்களை வழங்கு வார்கள். கிராம பஞ்சாயத்து அலுவலகத்தினை தொடர்பு மற்றும் கூட்டமையமாக கொண்டு இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது. எனவே விவசாய பெருமக்கள் முழுமையாக பங்கு பெற்று பயன்பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், வேளாண் இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சுப்பையா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஸ்வநாதன், வேளாண்மை உதவி இயக்குநர் முரளிதரன், கிரீடு வேளாண் அறிவியல் நிலைய அலுவலர் ராஜா ஜோசலின், கடுகூர் ஊராட்சி மன்றத்தலைவர் குரு மற்றும் வேளாண் அலுவலர்கள், விவசாய பெருமக்கள் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக வேளாண் உதவி இயக்குநர் மோகன் வரவேற்று பேசினார். இறுதியாக வேளாண் அலு வலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## நாகை மாவட்டத்தில் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன கலெக்டர் பழனிச்சாமி தகவல்



நாகப்பட்டினம், நாகை மாவட்டத்தில் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்று கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்தார்.

கொள்முதல்நிலையம்

நாகை மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பட்டமங்கலம் கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 2015 காரிப்பருவ நெல் கொள்முதல் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் நாகை மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி கலந்து கொண்டு நெல் கொள்முதலை தொடங்கி வைத்தார். பின்னர் விவசாயி களுக்கு நெல் கொள்முதல் செய்ததற்கான தொகையை வழங்கினார். பின்னர் இதுகுறித்து அவர் கூறியதாவது:– நாகை மாவட்டத்தில் சம்பா சாகுபடி நல்ல நிலையில் உள்ளது. எனவே, விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், விவசாயிகளுக்கு அனைத்து வகையிலும் உதவிகரமாக இருந்து கொள்முதல் பணிகளை முடிக்க வேண்டும். எந்த நேரத்திலும் எவ்வளவு நெல் கொண்டு வந்தாலும் நெல்லுக்குரிய தொகையினை வழங்கி அவர்களை காத்திருக்க வைக்காமல் அனுப்பி வைக்க வேண்டும். நடப்பாண்டு சம்பா சாகுபடி 1 லட்சத்து 2 ஆயிரத்து 336எக்டேர்பரப்பளவில்செய்யப்பட்டுள்ளன.

5 லட்சம் மெட்ரிக் டன்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் முதற்கட்டமாக நாகை மாவட்டத்தில் மொத்தம் 50 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நடப்பாண்டில் 5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,470–ம், பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,410–ம் அரசு நிர்ணயித்துள்ளது. விவசாயிகளுக்கு எவ்வித சிரமமும் இன்றி கொள்முதல் செய்ய நேரடி நெல் கொள்முதல் நிலைய பணியாளர்களுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. தேவைக்கேற்ப நேரடி கொள்முதல் நிலையங்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மேலும், 300 மூட்டைகள் ஒரே இடத்தில் இருந்தால் நேரடியாக அந்த இடத்திற்கே வாகனத்தை கொண்டு சென்று நெல் கொள்முதல் செய்யும் நடமாடும் நெல் கொள்முதல் நிலையம் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் நாகைமாலி எம்.எல்.ஏ., தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் ராதாகிருஷ்ணன், தாசில்தார் முருகன், ஊராட்சி மன்ற தலைவர் தையல்நாயகி மற்றும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**<u>85 ஆயிரம் எக்டேர் நிலத்தில் நெற்பயிர் சாகுபடி கலெக்டர் கருணாகரன் தகவல்</u>**



நெல்லை மாவட்டத்தில் 85 ஆயிரம் எக்டேர் நிலத்தில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு இருப்பதாகவும், எனவே இந்த ஆண்டு விவசாய உற்பத்தியில் மாவட்டம் தன்னிறைவு பெறும் என்றும் கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்தார். கலெக்டர் தொடங்கி வைத்தார். நெல்லை அருகே உள்ள முன்னீர்பள்ளம் கிராமத்தில் உள்ள சமுதாய நலக்கூடத்தில், வேளாண்மைத் துறை சார்பில், 'குழு சார்ந்த நிரந்தர பயண திட்டம்' தொடக்க விழா நடைபெற்றது. நெல்லை மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன், குத்துவிளக்கு ஏற்றி திட்டத்தை தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:-

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ விவசாயத்தை சார்ந்துதான் உயிர் வாழ்கின்றன. விவசாயத்துக்கு சிறு பாதிப்பு என்றால், அது உலக உயிரினங்கள் அனைத்தையும் பெரிதும் பாதிக்கும். தற்போது உள்ள தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு விவசாயிகள், தங்கள் பணிகளில் பல்வேறு மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். உற்பத்தி அதிகரிக்கும். இதையொட்டி வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் பணிபுரிந்து வரும் 114 வேளாண் உதவி அலுவலர்கள், மாவட்டத்தில் உள்ள 616 கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளை 15 நாட்களுக்கு ஒரு முறை நேரில் சந்திப்பார்கள். விவசாய பணிகளில் உள்ள புதிய தொழில்நுட்பங்கள் குறித்த செய்முறை விளக்கம் அளிப்பார்கள். இதன் மூலம் விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுவதோடு, உற்பத்தியும் அதிகரிக்கும். தன்னிறைவு நெல்லை மாவட்டத்தில் பருவமழை நன்றாக பெய்து இருப்பதால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விவசாய பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு உள்ளது. 85 ஆயிரம் எக்டேர் நிலத்தில் நெற்பயிர், 26 ஆயிரம் எக்டேர் பரப்பில் பயறு வகைகள், 10 ஆயிரம் எக்டேரில் சிறு தானிய வகைகள், 5 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் பருத்தி, 28 ஆயிரம் எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. இதன் மூலம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் விவசாய உற்பத்தி பெருகி இருக்கிறது. விவசாய உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாறும். இவ்வாறு கலெக்டர் மு.கருணாகரன் பேசினார். வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன், தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜா முகமது, வேளாண் விற்பனை துணை இயக்குனர் சங்கர், உதவி இயக்குனர்கள் (வேளாண்மை) மகாலிங்கம், (தோட்டக்கலை) தமிழ் வேந்தன், (விதைச்சான்று) அசோக்குமார், பாளையங்கோட்டை யூனியன் துணைத் தலைவர் ஹேமா பாலா, மாவட்ட கவுன்சிலர் கருத்தப்பாண்டியன்

தாஸ், யூனியன் கவுன்சிலர் ஆறுமுகம், முன்னீர்பள்ளம் பஞ்சாயத்து தலைவர் மகாராஜன் மற்றும் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

**<u>பயிர்களை நேரடியாக கண்காணிக்க வசதியாக வேளாண்மை அதிகாரிகளின் பயண திட்டம் கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார்</u>**



திருவாரூர், பயிர்களை நேரடியாக கண்காணிக்க வசதியாக திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை அதிகாரிகளின் பயண திட்டத்தை கலெக்டர் மதிவாணன்தொடங்கிவைத்தார்.

பயணதிட்டம்

திருவாரூர் மாவட்டம் மன் னார்குடி ஒன்றியம் கீழமணலி கிராமத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை மற்றும் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட் டத்தின் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கி, திட்டத்தை தொடங்கி வைத்து பேசி னார். அப்போது அவர் கூறிய தாவது:– விவசாயத்தில் இருமடங்கு உற்பத்தி, 3 மடங்கு வருமானம் என்ற குறிக்கோளை அடையும் பொருட்டு ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை மற்றும் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக் கிறது. இந்த திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கிராமங்களில் உதவி வேளாண் அலுவலர்கள் வாரந்தோறும் பயணம் மேற்கொள்வார்கள். ஒவ் வொரு மாதத்திலும் முதல் 2 வாரங்களில் உதவி வேளாண்மை அலுவலர்கள் பயணம் செல்லும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதையொட்டி ஒவ்வொரு பகுதியிலும் சாகுபடி செய் யப்படும் பயிர்களை அடிப் படையாக கொண்டு 20 முதல் 25 விவசாயிகள் அடங்கிய ''பயிர் ஆர்வலர் குழுக்கள்'' அமைக்கப்பட்டுள்ளன.

செயல்விளக்கங்கள்

ஒவ்வொரு பகுதியிலும் பய ணம் மேற்கொள்ளும் உதவி வேளாண்மை அலுவலர்களின் பெயர், பயணம் செல்லும் நாள், தொலைபேசி எண் போன்ற

விவரங்கள் சம்பந் தப்பட்ட பகுதியில் விளம்பரப் படுத்தப்படும். பயணம் மேற் கொள்ளும் உதவி வேளாண்மை அலுவலர்கள் வயல்களை நேரடியாக கண் காணிக்கவும், விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்பங்கள் தொடர்பான செயல் விளக் கங்களை அளிக்கவும் ஏற்பாடு கள் செய்யப்பட்டு உள்ளன. விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய தொழில்நுட்ப செயல்விளக்கங்கள், பயணத் தின் போது கண்டறியப்பட்ட பயிர் குறைபாடுகளுக்கான தீர்வுகள் தொடர்பாக 2 வாரங்களுக்கு ஒருமுறை உதவி வேளாண்மை அலுவலர் களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியானது வேளாண்மை உதவி இயக்கு னர் அலுவலகத்தில் நடைபெறும். 480பகுதிகள் உதவி வேளாண்மை அலுவ லர்கள் பயணம் மேற்கொள் வதை உயர் அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்து கண்காணிப் பார்கள். உதவி வேளாண்மை அலுவலர்கள் கிராமங்களில் நேரடியாக பயிர்களை கண் காணிக்க பயணம் மேற்கொள் ளும் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக் கும். திருவாரூர் மாவட்டத்தில் 60 உதவி வேளாண்மை அலு வலர்களுக்கு, 480 பகுதிகள் பிரித்து வழங்கப்பட்டு, நிரந்தர பயண திட்டம் உருவாக்கப்பட் டுள்ளது. இவ்வாறு கலெக்டர் கூறினார்.

கையேடுகள்

நிகழ்ச்சியில் கலெக்டர் மதி வாணன் திட்டம் தொடர்பான நாட்குறிப்பு கையேடு மற்றும் தொழில்நுட்ப கையேடுகளை வேளாண்மை உதவி அலுவலர் களுக்கு வழங்கினார். முன்ன தாக திட்ட விளக்க கண் காட்சியை கலெக்டர் பார்வை யிட்டார். இதில் மாவட்ட வருவாய் அதிகாரி மணிமாறன், வேளாண்மை இணை இயக் குனர் மயில்வாகணன், வேளாண்மை துணை இயக் குனர்கள் நடேசன், மதியழகன், வேளாண்மை உதவி இயக் குனர் உத்திராபதி, ஒன்றியக் குழு தலைவர்கள் உதய குமாரிதமிழ்க்கண்ணன், மலர் மணிகண்டன், மாங்குடி கூட் டுறவு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் மணி கண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.